களஞ்சியம் ஆறு · Registered as a Newspaper

யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 18 செவ்வாய்க்கிழமை (03-11-1992) UTHAYAN A Lively National Tamil Daily சுதிர் 341

# டிசம்பர் மாத இறுதிக்குள் போரை முடிக்க வேண்டும்

## படையினருக்கு பிரதமர் காலக்கெடு

கொழும்பு, நவம்பர் 3

வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் அரசுக்கு தினமும் 27 கோடி ரூபா செலவாகுகிறது. இனிமேலும் யுத்தத்தைத் தொடரமுடியாது. எனவே அடுத்த இரண்டு மாதங்களுக்குள் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

பிரதமரும் நிதியமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான டி. பி. விஜேதுங்க ஸ்ரீலங்காப் படையினரிடம் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

டிசம்பர் மாதத்துக்குள் வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்; அதற்கு ஏற்ற வகையில் படையினர் ஒன்று சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வவுனியாவுக்கு கடந்த சனியன்று விஜயம் செய்த திரு. விஜேதுங்க தச்சன்குளம் பிரதான இராணுவ முகாமில் படையினர் மத்தியில் உரையாற்றுகையில் இந்த அறி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொம்மர் வட்டமிட்டது

சுழிபுரம் நவ. 2

நேற்றுக் காலை 9.30 மணியளவில் பொன்னாலை, மூளாய், சுழிபுரம் பகுதிகளின் மீது பொம்மர் ஒன்று தாழப் பறந்து வட்டமிட்டுச் சென்றது.

இதனால் அப்பகுதி மக்கள் பீதியடைந்தனர். சுமார் பத்து நிமிட நேரம் பதற்ற நிலை நீடித்தது.

(உ-28)

## வலி.வடக்கில் இரவு வேளை

## ஷெல் ஓசை ஒருபுறம்! இடி ஓசை மறுபுறம்!!

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவும் பலாலி முகாமில் இருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கிக் கடும் ஷெல் தாக்குதல்களை படையினர் நடத்தினர்.

தெல்லிப்பழை, அளவெட்டி, வீமன் ஆகிய பகுதிகளில் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி இரவு 8 மணி தொடக்கம் இரவு முழுவதும் விட்டு விட்டு ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அனேகமான ஷெல்கள் வெளிவளவுகளில் விழுந்ததால் சேதம் எதுவும் ஏற்படவில்லை; ஆனால் ஷெல் தாக்குதலுக்கு உள்ளான பகுதிகளில் வாழும் மக்களும், அவற்றை அண்டிய பகுதிகளில் வாழும் மக்களும் இரவு நித்திரை செய்ய முடியவில்லை.

ஷெல் ஓசை ஒரு புறமும், இடி ஓசை மறுபுறமுமாக மக்கள் உறக்கமின்றி இரவைப் பதற்றத்துடன் கழிக்க வேண்டியதாக உள்ளது.

கடந்த நான்கு ஐந்து தினங்களாக வலி - வடக்கு, வலி - மேற்கு மக்களுக்கு இரவு மிகவும் பயங்கரமும் பதற்றமும் நிறைந்த வேளையாக மாறியுள்ளது.

(அ-68-17)

## முஸ்லிம்களின் வயல்களில் சயனைட் ஆணிகள் புதைப்பு

மணிலா, நவ. 3

அம்பாறை மாவட்டத்தில் இக்கல, முஸ்லிம் மக்கள் வேலை செய்யும் வயல்களில் சயனைட் விஷம் கொண்ட ஆணிகள் புதைக்கப்பட்டுள்ளனவாம்.

இவ்வாறு முஸ்லிம்கள் அச்சம் தெரிவித்திருப்பதாக "வெரித்தாஸ்" வானொலி அறிவித்தது.

இதுவரை சுமார் 15 முதல் 25 வரையிலான சயனைட் ஆணிகள் வயல்களிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன என்றும் —

எனினும் எவரும் இதுவரை பாதிக்கப்படவில்லை என்றும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

(உ-10)

## மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 3

உதவி அரசாங்க அதிபர் பிரிவு தோறும் தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கும் பணியில் இம்மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம், நல்லூர், தீவகம், காரைநகர், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் —

8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் —

9 ஆம் திகதி திங்கட்கிழமை கரவெட்டி, பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு, சாவகச்சேரி, பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் — தமிழீழ மீட்பு நிதி சேகரிக்கப்படும்.

நிதி சேகரிக்கப்படும் இடங்களும், நேரங்களும் பின்னர் அறிவிக்கப்படும் — என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்திருக்கிறார்.

(இ)

## படை முகாம்களிலுள்ள கைதிகள் சிறைகளுக்கு

கொழும்பு நவ. 3

தற்போது பாதுகாப்புப் படையினரின் பொறுப்பிலிருக்கும் அரசியல் கைதிகள் இனிமேல் சிறையதிகாரிகளின் பொறுப்பில் ஒப்படைக்கப்படுவர் என்று அறியவருகின்றது.

கடந்த மாதம் 27 ஆம் திகதி முதல் இத்திட்டம் அமுல்ப்படுத்தப்படுவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

ஆனால் சிறைச்சாலை ஆணையாளருக்கு அரசியல் கைதிகளைப் பாதுகாக்கப் போதிய வசதிகள் உண்டா என்பது குறித்து சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

1983 ஆம் ஆண்டில் குட்டிமணி, தங்கத்துரை உட்பட 52 தமிழ் அரசியல் கைதிகள் வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(த-10)

## காக்காச்சிவெட்டைப் பகுதியில் கைதான 91 தமிழர் கதி என்ன?

### ராணுவம் கைவிரிப்பு; உறவினர்கள் தவிப்பு

கொழும்பு, நவ. 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வெல்லாவெளி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருக்கும் காக்காச்சிவெட்டை கிராமத்தில் கடந்த மாதம் 19 ஆம் திகதி படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்ட 90 பேரின் கதி குறித்து உறவினர்கள் கலக்கம் அடைந்துள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இந்த 90 பேர் பற்றி அவர்களின் உறவினர்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொண்டபோது அவர்களில் 46 பேர் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் 45 பேர் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இதேவேளை கடந்த மாதம் 23 ஆம் திகதியும் காக்காச்சி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மன்னிப்புச்சபை பிரதிநிதிகளிடம் முறைப்பாடு

லண்டன், நவ. 3

காக்காச்சிவெட்டை வெல்லாவெளிப் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள், பின்னர் காணாமல் போன சம்பவம் குறித்த சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகளிடம் நேரில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகள் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்த போது இது பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

மூன்று கிராமங்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் எவ்வாறு கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர் என்ற விவரத்தை அக்கிராமவாசிகளும், காணாமற் போன இளைஞர்களின் உறவினர்களும் மன்னிப்புச் சபை பிரதிநிதிகளிடம் நேற்று விவரித்தனர்.

(உ-3-10)

## கிளாலிப் போக்குவரத்து இரு நாட்களாக சீர்குலைவு!

கிளாலிக் கடற்பகுதியில் நேற்றும், நேற்று முன்தினமும் கடற்படைப் படகுகளில் இருந்து பீரங்கித் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதனால் கிளாலிப் போக்குவரத்து தடைப்பட்டதாகத் தெரியவந்தது.

நேற்று முன்தினம் இரவு கிளாலிக் கடற்கரைப்பில் ஆலங்கேணி, சூரமுனைக் கல்முனைப் பகுதிகளில் ரோந்துசென்ற கடற்படைப் படகுகளில் இருந்து ஆலங்கேணி, கிளாலி கரைப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாலும் —

நேற்று மாலை 5 மணியளவிலும் அந்தப் பகுதிகளில் பீரங்கித் தாக்குதல் இடம்பெற்றதாலும் — போக்குவரத்து தடைப்பட்டது.

கடந்த இரண்டு தினங்கள் போக்குவரத்து தடைப்பட்டதால், கிளாலிப் பகுதியில் ஏராளமான மக்கள் தங்கியுள்ளதாகவும் —

வவுனியாவிலிருந்து வந்த பயணிகள் கிளிநொச்சி, ஆலங்கேணிப் பகுதிகளிலும் தங்கியுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

(உ-3-17)

## யாழ். மாவட்டத்துக்கு மேலதிக அரச அதிபராக மேலும் ஒருவர் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ். மாவட்டத்துக்கு மேலதிக அரச அதிபராக மேலும் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் ராணுவம் கைப்பற்றிய பகுதிகளுக்கு மேலதிக அரசாங்க அதிபராக கேர்ணல் [illegible] நாயக்கா நியமிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

[illegible] துடன் யாழ். நகரில் [illegible] யாற்ற மேலும் ஒருவர் மேலதிக அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் —

தற்சமயம் வடக்கு - கிழக்கு மாகாண சபையில் கல்வி, கலை, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் பிரதிச் செயலாளராகக் கடமையாற்றும் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் — கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

## அடுத்த அமெரிக்க ஜனாதிபதி யார்? நாளை மாலையில் முடிவு தெரியும்

வாஷிங்டன், நவ. 3

அடுத்த அமெரிக்க ஜனாதிபதி யார் என்பது நாளை மாலை தெரியவரும்.

புதிய அமெரிக்க ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது.

நாளை மாலைக்குள் தேர்தல் முடிவுகள் வெளியாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் —

ஜனாதிபதி தேர்தலில் [illegible]

ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தன்னுடன் போட்டியிடும் பில் கிளின்ரனின் ஜனாதிபதித்தை விமர்சிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் பிரசாரத்தின் இறுதிக் கட்டத்தில் விஸ்கொன்சின் மாநிலத்தில் நடைபெற்ற பிரசாரத்தின் போது தொலைக்காட்சியில் தோன்றிய ஜோர்ஜ் புஷ் எதிராளியான பில் கிளின்ரன் வியட்நாம் யுத்தத்தின் போது நடந்து கொண்ட விதம் பற்றிக் கடுமையாகச் சாடினார்.

புஷ்ஷின் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த கிளின்ரன் அக்குற்றச்சாட்டுகளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

சூழல் எமது சொத்து - இனிய கனிகள் நமது சத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போலி விலாசத்துக்கு வந்த
## 1 கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் பிடிபட்டன

கொழும்பு, நவ. 3

கொழும்பில் போலி விலாசம் ஒன்றுக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கோடி ரூபாவுக்குக் கூடுதலான பெறுமதியுள்ள பொருள்களை சுங்கத் திணைக்களம் நேற்றுக் கைப்பற்றியதாக அறிவிக்கப்படுகிறது

சேர்ட்டுக்கள், மூக்குக் கண்ணாடிகள், இஸ்திரிப் பெட்டிகள், தொலைபேசி உபகரணங்கள் ஆகியன இதில் அடங்கியுள்ளன. ஆனால் இறக்குமதியாளர் ஹொங்கொங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மின்சாரப் பொருள்களே அடங்கியிருந்ததாகக் குறிப்பிட்டிருந்தார். விலாசத்தில் குறிப்பிட்டது போன்ற வர்த்தக நிறுவனமோ அல்லது நபரோ

(6 ஆம் பக்கம் பார்க்க)


## இராமநாதன் கல்லூரி
## ஆண்டு-6 அனுமதி

★ விண்ணப்பங்கள் ஏற்கும் கடைசித் திகதி 4-11-92
★ விண்ணப்பப் படிவங்களை ரூபா 25/- செலுத்தி கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
★ அனுமதி அட்டைகளை 11-11-92 இல் பெற்றுக் கொள்ளவும்.
★ பரீட்சை நடைபெறும் திகதி 16-11 92

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.
(சி/2516)

ப. பரராஜசிங்கம்
மேலதிக அதிபர்
(அதிபருக்காக)


## 4 வது ஆண்டு நினைவலைகள்



தாயகத்தில் மலர்வு:
12 — 10 — 1945

தாயகத்தில் அரியாய அழிப்பு:
18 — 10 — 1988

திதி:
03 — 11 — 1992

அமரர்
### சின்னத்துரை சற்குணராஜா
(ராஜன்ஸ் கபே உரிமையாளர், சந்தையடி, மானிப்பாய்.)

"அன்பின் குலவிளக்காய்
பாசத்தின் பிறப்பிடமாய்
எல்லோரினதும் நெஞ்சத்தில் - வாழ்ந்து
பூவுடல் புகழுடலாக மாறி
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
நான்கு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டு
நீங்காதையா"


உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்,
மைத்துனர்கள், உறவினர்கள்.

சந்தையடி,
மானிப்பாய்.
(5539)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
09-10-1961



மறைவு:
28-11-1990

### கிருஷ்ணபிள்ளை ஸ்ரீதரன் (ஆமி ஸ்ரீ)
(லங்கா சிமெந்து கூட்டுத்தாபனம்)

திதி: 03 — 11 — 1992

ஆண்டொன்று சென்றாலும்
அழியாத கோலமதாய்
விளங்கும் எங்கள் அன்புத் தெய்வமே
அணையாத் தீபமே - ஸ்ரீ
பண்பின் உறைவிடமே
பாசத்தின் சிகரமே
நெஞ்சில் நிறைந்தவரே - ஸ்ரீ
நீங்கள் எங்களைப் பிரிந்து
ஈராண்டு சென்றாலும்
நினைவு எங்கள் நெஞ்சை விட்டு
அகலவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

தாய், சகோதரர்
மனைவி, மகன்.

மயிலங் கூடல்,
இளவாலை.
(5419)

# கல்வியை இழந்தால் இனம் அழியும்; உள்ள வசதியை பயன்படுத்துங்கள்
### புதியமாணவர் வரவேற்புக் கூட்டத்தில் துணை வேந்தர்

யாழ்ப்பாணம், நவ. 3

யாழ்ப்பாணத்தில் மக்கள் அனுபவிக்கும் சகல துன்பங்களையும் பல்கலைக்கழக மாணவர்களும் அனுபவிக்க வேண்டியே இருக்கும். இந்நிலையிலும் கல்வி மீதான அக்கறையும் அபிலாசையும் வளர வேண்டும். நாம் கல்வியை இழந்தால், அதனை அழிய அனுமதித்தால் எமது பொருளாதாரம் அழியும்; இனம் அழியும்.

—இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா.

யாழ். பல்கலைக் கழகத்துக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் கலைப் பீட மாணவர்களை வரவேற்கும் கூட்டம் நேற்று முற்பகல் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் நடந்த அந்தக் கூட்டத்தில் புதிய மாணவர்களை வரவேற்று துணைவேந்தர் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

புதிய மாணவர்கள் எல்லா வசதிகளுடனும் இங்கு கல்வி கற்கலாம் என நினைக்கக் கூடாது. இன்றைய போர்ச் சூழ்நிலையில் இங்குள்ள சொற்ப வசதிகளையும் வாய்ப்பாகக் கருதி தக்கவாறு பயன்படுத்தி சர்வதேச ரீதியில் புகழ் ஈட்ட வேண்டும்.

இலங்கையில் முன்பு தமிழ் மாணவர்களே உயர் கல்வியில் அதிக அக்கறை உடையவர்களாக இருந்து வந்தனர். தற்பொழுது சிங்களவர்களும் கல்வியில் அதிக அக்கறை காட்டி வருகிறார்கள் — என்றார்.

கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பதிவாளர் திரு. எஸ். பரமேஸ்வரன் ஆகியோர் உட்பட பலர் அங்கு மாணவர்களை வரவேற்றுப் பேசினர். (த-5)

### மருத்துவ பீடாதிபதியின்
## ராஜினாமாவை வாபஸ் பெற துணை வேந்தர் வற்புறுத்து

யாழ்ப்பாணம், நவ. 3

இராஜினாமாவை மீள் பரிசீலனை செய்து, மீண்டும் பீடாதிபதிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு பேராசிரியர் எஸ். பாலசுப்பிரமணியத்தை யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா கேட்டுள்ளார்.

யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் 'ராக்கிங்' சம்பந்தமாக இடம்பெற்ற பிரச்சினைகளைத் தொடர்ந்து மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் எஸ். பாலசுப்பிரமணியம் பீடாதிபதி பதவியை இராஜினாமாச் செய்திருப்பது தெரிந்ததே.

இந்த இராஜினாமா குறித்து துணைவேந்தர் அ. துரைராஜாவிடம் நேற்றுக் கேட்ட போது —

பொதுநலன் கருதி இராஜினாமா முடிவை மீள்பரிசீலனை செய்து, மீண்டும் பீடாதிபதி பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு தாம் பேராசிரியர் எஸ். பாலசுப்பிரமணியத்திடம் எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுத்திருப்பதாகத் தெரிவித்தார்.

### பிற பல்கலைக்கழகங்களுக்கு
## தெரிவான யாழ். மாணவர் பதிவு செய்ய கால அவகாசம்

பேராதனை, மொறட்டுவை உட்பட ஏனைய பல்கலைக் கழகங்களுக்கு தெரிவான யாழ். மாவட்ட மாணவர்கள், தங்களைப் பதிவு செய்து கொள்ள மேலும் கால அவகாசம் வழங்கப்படும். பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுத் தலைவர் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இத்தகவலை யாழ். செயலகத்துக்கு நேற்று அனுப்பினார்.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் ஏற்கனவே அந்தந்தப் பல்கலைக் கழகப் பதிவாளர்களுக்கு அனுப்பிய கடிதங்களின் தொடர் இலக்கத்தை குறிப்பிட்டு, மேன்முறையீட்டுக் கடிதங்களை எழுதி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரியிடம் ஒப்படைக்குமாறும் —

இன்று அல்லது நாளை "குமண" கப்பல் கொழும்பு செல்லும்போது செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் அரச அதிபரிடம் அக்கடிதங்களை ஒப்படைப்பர் என்றும் — செயலகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## யாழ்பல்கலை. பிரச்சினைகள் நேரில் வந்து பாருங்கள்!
### வெளி ஆசிரியர்களுக்கு அழைப்பு

யாழ். பல்கலைக்கழகமும் அங்கு கடமை புரிவோரும் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கஷ்டங்களை ஏனைய பல்கலைக்கழக ஆசிரியர்கள் நேரில் வந்து பார்வையிட வேண்டும்.

யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சந்திரகாந்தன் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பளம் தொடர்பாக கொழும்பு பல்கலைக்கழகத்தில் கடந்த வியாழன் இடம்பெற்ற பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளன கூட்டத்தில் வைத்தே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதன் மூலம் யாழ். பல்கலைக்கழகமும், அங்கு பணி புரியும் ஆசிரியர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்துவிட முடியாது.

நாம் வாழ்வதற்கான அடிப்படைப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றோம். இது ஏனைய பல்கலைக் கழகங்களை விட மாறுபட்ட பிரச்சினையாகும், எனது அழைப்பை ஏற்று யாழ். பல்கலைக்கழகத்தைப் பார்வையிட நீங்கள் முன்வர வேண்டும், அங்கு வரும் பேராசிரியர்களுக்கான பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்படும்-இப்படி அவர் அங்கு உறுதியளித்தார். (த-5)

## ரூபாவின் மதிப்பு உயருமாம்

கொழும்பு, நவ. 3

இலங்கை ரூபாவின் மதிப்பு விரைவில் அதிகரிக்கும் என ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்தார்.

ஒரு சில ஆண்டுகளில் இலங்கை ரூபாவின் மதிப்பு உயர்ந்து டொலர், பவுண், யென் போன்ற சக்தி வாய்ந்த நாணயமாகி விடும் என்று அவர் அனுராதபுரத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்தார். (த-எ)

## அளவெட்டி தபால்கள்

அளவெட்டி, நவ. 3

அளவெட்டி பிரதம தபாலகத்தில் இருநூறுக்கு மேற்பட்ட தபால்கள் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அளவெட்டி வடக்கிற்கு உரிய தபால்களே இவ்வாறு தேங்கிக் கிடப்பதாகவும், அளவெட்டி தெற்கு, மேற்கு, கிழக்குப் பகுதிகளுக்கான தபால் விநியோகம் சீராக நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-13)

## 2,600 கோடி வருமானம்!

கொழும்பு, நவ. 3

இந்த ஆண்டின் முதல் 9 மாத காலத்தில் சுங்கத் திணைக்களத்துக்கு 2 ஆயிரத்து 600 கோடி ரூபா வருமானமாகக் கிடைத்தது.

இதனை சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் லலித் ஹிங்கம தெரிவித்தார். (த-எ)

## சுவிஸ் பிரசைக்கு 6ஆம் திகதி தண்டனை

கொழும்பு, நவ. 3

சட்டவிரோதமாக ஆயுதங்களைத் தமது வாசஸ்தலத்தில் வைத்திருந்த குற்றத்தை ஒப்புக்கொண்ட சுவிஸ் பிரஜையான அலன் செவர் கிறிஸ்டினுக்கு இம்மாதம் 6ஆம் திகதி தண்டனை வழங்கப்படும்.

நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி எச். எம். எஸ். பி. மடவல விசாரணை முடிவில் இதனை அறிவித்தார்.

குற்றத்தை ஒப்புக்கொண்ட சுவிஸ் பிரஜைக்கு, தண்டனை விதிப்பதில் கருணை காட்டும்படி அவரது சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி நீதிபதியைக் கேட்டுக்கொண்டார். [illegible]

## அழுகிய பெரிய வெங்காயத்தால் 15 ஆயிரம் பேருக்கு வயிற்றோட்டம்

கொழும்பு, நவ. 3

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த தம்புள்ள பிரதேசத்தில் கடந்த வாரம் 15 ஆயிரம் பேர் வயிற்றோட்டத்தினால் பாதிக்கப்பட்டனர்.

இப்பகுதி, வயல்வெளிகளில் கொட்டப்பட்ட அழுகிய பெரிய வெங்காயம் குடிதண்ணீருடன் கலந்ததே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

தம்புள்ள பகுதியில் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவும், மக்கள் அசுத்த நீரைக்குடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (இ-5)

## வடமராட்சி கிழக்கிலும் வயிற்றோட்டம் பரவுகிறது

தென்மராட்சி, நவ. 3

தென்மராட்சிப் பகுதியில் பரவி வந்த வயிற்றோட்ட நோய் இப்போது வடமராட்சி கிழக்கிலும் பரவத் தொடங்கியுள்ளது

வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பலர் மருதங்கேணி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந் நோயினால் பீடிக்கப்பட்டு செம்பியன்பற்று முகாமில் ஒன்றரை வயதுக்குழந்தை ஒன்று கடந்த செவ்வாய்க் கிழமையும் மருதங்கேணியில் ஒன்றரை மாதப் பெண் குழந்தை ஒன்று கடந்த வியாழக்கிழமையும் பலியாகினர். [ஆ-117]

## வவுனியாவில் அலுவலகம்

வவுனியா, நவ. 3

காணாமல் போனோர் தொடர்பான மனித உரிமைகள் செயலணியின் வவுனியா பிராந்திய நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது. இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதர் இதனைத் திறந்து வைத்தார். (உ-த-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தாயகம் திரும்பிய ஈழத் தமிழருக்கு
# 3 மாதங்களுக்கே இலவச உணவு

யாழ்ப்பாணம், நவ. 3 — தமிழகத்தில் இருந்து இலங்கை திரும்பும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு ஆறு மாதங்களுக்கு பங்கீட்டு உணவுப் பொருள்கள் இலவசமாக வழங்கப்படும் என்று அங்கு வைத்துத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இங்கு மூன்று மாதங்களுக்கு மட்டுமே இலவச உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இத்தகவலை தமிழகத்தில் இருந்து திரும்பி திருகோணமலை திருக்கடலூரில் மீளக் குடியேறியுள்ள திரு. ஆர். இராமமூர்த்தி தெரிவித்தார்.

தமிழகத்தில் இருந்து திரும்பி வந்து திருக்கடலூரில் மீளக் குடியேறியுள்ளவர்களின் நலன்களை திருகோணமலை ரோட்டரிக் கழகம் கவனித்து வருகிறது. அவர்களுக்கு 163 வீடுகளைக் கொண்ட வீடமைப்புத் திட்டத்தை திருகோணமலை ரோட்டரிக் கழகமே நிர்மாணித்து வருகிறது.

இந்த வீடமைப்புத் திட்டம் அண்மையில் திருமலைக்கு விஜயம் செய்த மாவட்ட ஆளுநர் காமினி எதிரிசிங்க அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. அப்போது அகதிகள் சார்பில் தமது கஷ்டங்களை திரு. ஆர். இராமமூர்த்தி, ஆளுநருக்கு எடுத்துக் கூறினார்.

மேலும் மேலும் அகதிகள் தமிழகத்திலிருந்து திரும்புவதால், மேலதிக தற்காலிக குடிசைகள் தேவைப்படுவதாகவும் திரு. இராமமூர்த்தி எடுத்துச் சொன்னார். (அ)

### மட்டு. நகரில்
# இராணுவம், பொலீஸ் கூட்டாக ரோந்து!

கொழும்பு, நவ. 3 — ஏறாவூர், ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனைப் பகுதிகளில் இராணுவமும் பொலீஸாரும் கூட்டாக ரோந்தில் ஈடுபட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

புணானைப் பகுதியில் பஸ் ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக இக்கூட்டு ரோந்து இடம் பெறுகிறது. (த-எ)

## கொழும்பில் சவூதி தூதரகம்

கொழும்பு, நவ. 3 — அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் சவூதி அரேபியா தமது தூதரகத்தைக் கொழும்பில் திறக்க ஏற்பாடுகள் செய்து வருவதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. (த-எ)

### விடைத்தாள்களில் மாற்றம் செய்த
# பரீட்சைத் திணைக்கள ஊழியர்கள் கைதாகி பின் பிணையில் விடுதலை

கொழும்பு, நவ. 3 — ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான விடைத்தாள்களில் மாற்றம் செய்வதற்கு பணம் பெற்றதாகக் கூறப்படும் பரீட்சைத் திணைக்கள ஊழியர் ஒருவரும், கல்வித் திணைக்கள ஊழியர் ஒருவரும் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு கோட்டை நீதிவான் திருமதி என். சி. ரி. சே. சன்னஸ்கலதலா இவர்கள் இருவரையும் பத்தாயிரம் ரூபா ஆள் பிணையிலும், ஒரு லட்சம் ரூபா உறுதிப் பிணையிலும் விடுவித்தார்.

ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான விடைத்தாள்களில் மாற்றம் செய்து கூடுதல் புள்ளிகளை வழங்குவதற்காக இவர்கள் இருவரும் 23 பரீட்சார்த்திகளிடமிருந்து தலா 15 ஆயிரம் ரூபா முதல் 38 ஆயிரம் ரூபா வரை பணம் பெற்றனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விடைத்தாள்களின் புள்ளிகளில் மாற்றம் செய்வதற்காக பணம் செலுத்திய இந்த 23 பரீட்சார்த்திகளும் அனுராதபுரம், எலபிந்துனுவேவ, குருநாகல், மாத்தளை, பிலிமத்தலாவை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்று இது தொடர்பாக விசாரணை நடத்தி வரும் இரகசியப் பொலீஸார், நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

18 புள்ளிகளைப் பெற்ற ஒருவரின் விடைத்தாளில் 78 புள்ளிகளும்—

38 புள்ளிகளைப் பெற்ற ஒருவரின் விடைத்தாளில் 88 புள்ளிகளும்— இடப்பட்டு மாற்றம் செய்யப்பட்டிருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்குவிசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சமயம், தமது கட்சிக்காரர்கள் தாமாகவே இந்த மோசடியில் ஈடுபடவில்லை என்றும்—

உயர் அதிகாரிகளின் கட்டளையைத் தான் அவர்கள் இருவரும் நிறைவேற்றினார்கள் என்றும்—

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்களால் தெரிவிக்கப்பட்டது. (த-இ-5)

### யாழ். பல்கலைக்கழக
# ஆசிரியர்களுக்கு தீர்வையற்ற மோட்டார் சைக்கிள்கள்

யாழ். பல்கலைக்கழகத்தில் கடமை புரியும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துக் கஷ்டங்களை நிவர்த்தி செய்யுமுகமாக அவர்களில் ஐம்பது பேர் தீர்வையற்ற முறையில் மோட்டார் சைக்கிள்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ள உயர்கல்வி அமைச்சர் சாகுல் ஹமீது இணக்கம் தெரிவித்திருக்கிறார் என்று அறிவிக்கப்படுகின்றது.

இம் மோட்டார் சைக்கிள்களின் பாவனைக்குப் போதியளவு மண்எண்ணெய் கிடைக்கச் செய்யவும் அமைச்சர் இணக்கம் தெரிவித்தார் என்றும் கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. (த-எ)

# ஜே. வி. பி இயக்க தலைவரின் தலைமையகம் இந்தியாவில்
## லண்டனிலிருந்து மாற்றப்பட்டதாம்

ஜே. வி. பி. இயக்கத்தின் தற்போதைய தலைவர் சோமவன்ஸ அமரசிங்கா தமது தலைமை அலுவலகத்தை லண்டனில் இருந்து தென்னிந்தியாவிற்கு மாற்றம் செய்துள்ளார் என்றும்—

பெரும் கொள்ளைகளை நடத்தி இந்த இயக்கத்துக்குத் தேவையான நிதியை திரட்டும்படி இங்குள்ள ஜே. வி. பியினருக்கு சோமவன்ஸ அமரசிங்கா உத்தரவிட்டுள்ளார் என்றும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

பல ஜே. வி. பியினர் தமிழ்ப் பெயர்களுடன் தென்னிந்தியாவுக்குத் தப்பி ஓடிவிட்டனர் என்றும், அங்கு அகதி முகாம்களில் தங்கியுள்ளனர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

ஜே. வி. பி. இயக்கத்தைப் புதுப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படின் அவற்றை முறியடிக்க சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்படி அனைத்து பொலீஸ் நிலையங்களையும் பொலீஸ் திணைக்களம் பணித்துள்ளது. (த-எ)

# காத்தான்குடியில் தனியார் பஸ்ஸின் மீது தாக்குதல்

காத்தான்குடியில் இருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றின் மீது வெலிக்கந்தையில் வைத்து இனந்தெரியாதோர் [illegible]தல் நடத்தினார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பஸ்ஸில் இருந்த ஐம்பது பயணிகள் உயிர் தப்பினர் என்றும்—

பாதுகாப்புப் படையினர் அத்தாக்குதலை முறியடித்த[illegible] செய்தி வெளியிட்டிருக்கிறது. (த-எ)

நல்லூர் பிரதேச நூலகம் யாழ்ப்பாணம்

# கடந்த வெள்ளியும் கொழும்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள்

கொழும்பு, நவ. 3 — கொழும்பு நகரில் கடந்த 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக அறிவிக்கப்படுகிறது.

அன்று காலை முதல் நகரின் கேந்திர இடங்களிலும், பள்ளிவாசல்களுக்கு அருகிலும் ஆயுதம் தரித்த பொலீஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் சகிதம் தயார் நிலையில் காணப்பட்டனர்.

இதே வேளை—

அன்று தலைநகர் பள்ளிவாசல்களில் ஜும்மாத் தொழுகைகள் வழமைபோல் நடைபெற்றதாக அறிவிக்கப்படுகிறது. (த-5)


## உதயன் வெளியீட்டகத்தினர்
## யாழ். பல்கலைக்கழகத்துடன்
இணைந்து நடத்திய

# ★ கட்டுரைப்போட்டி முடிவுகள் ★

## பரிசு பெறுவோர் விவரம்

பாடசாலை மாணவர் - பிரிவு - 1
(9, 10, 11 ஆம் ஆண்டுகள்)

**முதலாவது பரிசு — தங்கப் பதக்கம்**
பா. பிரகாஷ் ஹாட்லிக் கல்லூரி, சாவகச்சேரி.

**இரண்டாவது பரிசு — ரூபா 1,000-00**
செ. ரமேஸ் ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

**மூன்றாவது பரிசு — ரூபா 500-00**
சு. குமரன் ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.

## ஆறுதல் பரிசுகள்

01. த. குந்தவி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு.
02. சி. சிவசாம்பவன், யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
03. சி. சுமதி, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.
04. சி. யாமினி, வட இந்து மகளிர் கல்லூரி, புலோலி, பருத்தித்துறை.
05. க. செந்தூரன், யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
06. தி. நளினி, திருக்குடும்ப கன்னியர்மடம், யாழ்ப்பாணம்.
07. சிவராசா ஜூலியற் பெனிற்றா, கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம. வி., வேலணை.
08. அல்பேட் பெலிசியா, புனித மரியாள் பெண்கள் பாடசாலை, வேலணை.
09. க. தயாளினி, வட இந்து மகளிர் கல்லூரி, புலோலி, பருத்தித்துறை.
10. வி. காயத்திரி, அருணோதய கல்லூரி, அளவெட்டி, பண்டத்தரிப்பு.
11. பா. நீரஜா, இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை, மருதனார்மடம்.
12. உ. உதயமலர், பெரியபுலம், ம. வி. வண் - வடக்கு, யாழ்ப்பாணம்.
13. த. பவிதா, கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில், யாழ்ப்பாணம்.

இப்போட்டியில் ஆர்வத்துடன் கலந்து கொண்ட பெரும் எண்ணிக்கையான மாணவ மணிகளுக்கும், அவர்களை ஊக்குவித்த ஆசிரியர்கள், அதிபர்களுக்கும், கோட்ட, கொத்தணி மட்டங்களில் போட்டியை நடத்துவதற்கு பலவாற்றானும் உதவிய ஆறு கல்விக் கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், கொத்தணி அதிபர்களுக்கும் எமது நன்றிகள்.

இறுதித் தெரிவின் போது கட்டுரைகளைத் தனித் தனியே நுணுகி ஆராய்ந்து, மதிப்பீடு செய்து புள்ளியிட்டுத் தந்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

நிர்வாகத்தினர்,
உதயன் வெளியீட்டகம்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[பாடசாலை மாணவர் — பிரிவு - 2 இன் முடிவுகள் நாளைய உதயனில்.]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பிறவுன், கறுப்பு, வெள்ளை சேனல், பெட்டுக் குஞ்சுகள், புறொய்லர் உடன் விற்பனைக்குண்டு: "மல்லிகா பதி", மார்க்கற் வேலி, மானிப்பாய். [23107]

இறக்குமதி செய்யப்பட்ட பீற்றூட், கறிமிளகாய், கரட் விதைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பிள்ளையார், இல.251, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். சனி, ஞாயிறு தினங்களில் வீட்டிலும் பெறலாம் 07, கைலாசபிள்ளையார்கோவில் பின் வீதி, நல்லூர். [23042]

Royal Hero பாவித்த நல்ல நிலையிலுள்ள ஆண்களுக்குரிய சைக்கிள் விற்பனைக்கு உண்டு அரஸ் புத்தக நிலையம். இல 146 நவீன சந்தை (வைரவ கோயில் அருகில்), யாழ்ப்பாணம். [23094]

## தேவை

கறுப்பு நிற கம்பளித் துணிகள் சகல அளவுகளும் வாங்கப்படும்: தரம், அளவு ஆகியவற்றிற்கு ஏற்ற தரும்தலை கொடுக்கப்படும். கடிதமூலம் அல்லது நேரடியாக தொடர்பு கொள்ளவும்: மா. காலிங்கராசா, இல. 15, ராதா ஒழுங்கை, வண்ணார் பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்; (தட்டாதெருச் சந்திக்கு அருகாமையில்) [23113]

## WANTED

5¼'' Unused Floppy Discs Required for Personal Computers Contact School of Business Administration, 16, 3rd, Cross Street, Jaffna [இ-3761]

## 16 ஆடை தயாரிப்பு தொழிற்சாலைகள்

இம்மாதத்தில் மட்டும் பதினாறு ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைகள் தென் பகுதியில் திறந்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. [த-எ]

## ஹெரோயின் கைப்பற்றப்பட்டது

கொழும்பு, நவ.3

புத்தளம் பகுதியில் சந்தேகத்தின் பேரில் ஒருவரைச் சோதனையிட்ட பொலீஸார் அவரிடமிருந்து இரண்டு கிலோ ஹெரோயின் போதைவஸ்தைக் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருளின் பெறுமதி 25 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (த-எ)

# கடந்த ஆகஸ்டில் மட்டும் 840 படையினர் தப்பிஓட்டம்

கொழும்பு, நவ. 3

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் 840 பேர் எந்தவித அறிவிப்பும் இன்றி இராணுவத்தில் இருந்து விலகிச் சென்றுள்ளனர்.

கூட்டுப்படைகள் தலைமையகப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட பத்துப்படை அதிகாரிகள் அராலித்துறைக் கண்ணிவெடியில் கொல்லப்பட்டதை அடுத்து இராணுவத்திலிருந்து பாய்ந்தோடுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக செய்திகள் வெளிவந்தன.

அந்த நிலை இப்போது மாறிவிட்டது. கடந்த ஆகஸ்ட் மாதம் 840 பேரும், செப்டம்பர் மாதம் 502 பேரும், அக்டோபர் மாதம் 116 பேரும் இராணுவத்திலிருந்து பாய்ந்தோடி உள்ளனர்.

இப்படி கேர்ணல் சரத்முனசிங்கா மேலும் தெரிவித்தார் என கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது. [த-இ-5]

# நாடு திரும்பும் றொனிடிமெல் அரசியலில் ஈடுபடுவார்

## அவரின் மனைவி தகவல்

கொழும்பு, நவ. 3

எதிர்வரும் டிசம்பரில் நாடு திரும்பவிருக்கும் முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் மீண்டும் அரசியலில் ஈடுபடவிருக்கின்றார்.

இத்தகவலை அவரது மனைவி மல்லிகா டி மெல் தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

லலித்-காமினி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உப தலைவர் பதவியில் இருந்து திருமதி மல்லிகா டி மெல் அண்மையில் ராஜினாமாச் செய்தது தெரிந்ததே. (த-எ)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் கணபதிநாதன் சபாநாதன்

தோற்றம்: 11 — 07 — 1954 மறைவு: 07 — 11 — 1989

திதி: 03 — 11 — 1992 (செவ்வாய்க்கிழமை)

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் இகரமாய் வாழ்ந்து எங்கள் குடும்பங்களை எல்லாம் வாழ வைத்து, எங்களை எல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! மூன்றாண்டுகள் சென்றாலும், உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலாது. உங்களை நினைந்து கண் கலங்காத நாட்களே இல்லை; உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் என்நாளும் துயருறும்:

பெற்றோர்; சகோதரர், சகோதரிகள், மைத்துனர்மார் மைத்துனிமார், மருமக்கள், பெறாமக்கள்.

177, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். [23119]

## விற்பனையாகின்றது

சித்திரம் ஆண்டு 11, சைவநெறி ஆண்டு 10-11, கந்தன் புகழ் ஷஷ்டி கவசம் (ஆறு படை வீடு). கந்தபுராணம். உற்பத்தி காண்டம் இவை யாவும் விற்பனையாளருக்கு குறைந்த கழிவுடன் வழங்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, யாழ்ப்பாணம். [23070]

மெத்தமாகவும், சில்லறையாகவும் கலண்டர்கள் விற்பனைக்குண்டு. விலாசம் பதிப்பித்தும் கொடுக்கப்படும். வியாபாரிகளுக்கு குறைந்த கழிவு வழங்கப்படும். ஸ்ரீ காந்தா அச்சகம், யாழ்ப்பாணம். [23071]

## சைக்கிள் விற்பனை

பெண்கள் சைக்கிள் ஒன்றும், மாணவர் சைக்கிள் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. க. முத்துக்குமாரசாமி, பாரதி பதிப்பகம், (A. B. Printers) 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [இ-3757]

## ஆண்டு - 6 அனுமதி

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு - 6 அனுமதிக்கான மாதிரிப் பரீட்சைகள் 01-11-1992, 03-11-1992, 05-11-1992, 07-11-1992, 08-11-1992, 10 - 11 - 1992, 12-11-1992 ஆகிய தினங்களில் பி.ப.3-30 மணிக்கு நடத்தப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [இ-3752]

## மணமகன் தேவை

யாழ். இந்து, 30 வயது நிரம்பிய கனடாவில் பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு A/L சித்தி பெற்ற மணமகன் தேவை. இலக்கினத்தில் இராகு, நட்சத்திரம் ரோகிணி கிரகபாவம் 32. மணமகனை அனுப்பும் பொறுப்பு அவர்களுடையது. சீதனம் தரப்படும். ABCDE, இல. 20, கண்டி றோட், கண்டிக்குளி. [23120]

## வெளிவந்துவிட்டது

'மாற்றம்' காலாண்டு மக்கள் சஞ்சிகை, சிறுகதை, பொது அறிவு, குறுக்கெழுத்து போட்டி, சுவையான புதினங்கள், கட்டுரைகள் போன்றவற்றைக் கொண்டது. ரூ 10/-. ஆண்டுச்சந்தா 35/-. தமிழ்த்தாய் மன்றவெளியீடு. [23074]

# விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவு நாள்

மண் ஈர்ப்பு 01 - 08 - 1920

விண் ஏற்பு: 03 - 11 - 1991



## சிங்கராசா றோசம்மா

பன்னிரெண்டு திங்கள் பறந்ததுவே - அம்மா!
உன் புன்னகை தவழும் பூ முகம் தேடுகின்றோம்,
கண்ணீரில் கலங்குகின்றோம்
கவலையில் வாடுகின்றோம்
எண்ணற்ற ஆண்டுகள் சென்றிடினும்,
எண்ணத்தில் ஏற்றிடுவோம்
விண்ணகத்தில் உன் வாழ்வு வானதூதர் வரிசையில்
பண்ணிசைக்க வேண்டி நிதம்
பரமனிடம் துதித்திடுவோம்.

இவரின் பிரிவால் துயருறும்:

பாசமிகு கணவர், அன்புக் குழந்தைகள், மருமக்கள், சகோதரர்கள், பரிவுமிக்க பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்.

சென். யூட்ஸ் அவெனியூ, அரியாலை. [23118]

# பதவி வெற்றிடம்

## புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம். (வது)

## கணக்காளர் தரம் III

**கல்வித் தகைமைகள்:-**

அ. கூட்டுறவுப் பணியாளரின் 9வது சம்பளத்திட்டத்திற்கமைய கணக்குப் பதிவாளர்/கணக்கு எழுதுனர்/கணக்காய்வு எழுதுனர் பதவியிலான மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10வது சம்பளத்திட்டத்திலான கணக்கு சம்பந்தமான பதவியில் ஆறு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடை நிலைப் பரீட்சையிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குத்துறையிலான இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையுடன் கணக்கியல் தொடர்பான நான்கு வருட அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்)/ க. பொ. த. (உயர் தரம்) கணக்கியல் உள்ளடக்கிய மூன்று பாடங்களிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் தொடர்பான துறையில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

சம்பளத்திட்டம்:

1005 — 1705
40x5 — 50x10 (இத்துடன் கூ. ஆணைக்குழுச் சுற்று நிருபத்திற்கு அமைய சகல படிகளும் வழங்கப்படும்)

பிணை: ரொக்கம்: 2000/-, ஆதனம்: 3000/-
வயதெல்லை: 23 — 40 வருடங்கள்
விண்ணப்ப முடிவுத் திகதி: 21 — 11 — 1992

சங்க எல்லைப் பரப்பிலுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் பதில் பொது முகாமையாளர், புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம், இல. 201/1, 8ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

— பதில் பொது முகாமையாளர்.
புங்குடுதீவு-நயினாதீவு, ப. நோ. கூ. சங்கம், யாழ்ப்பாணம். [இ-3653]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச நூலகம் ... யாழ்ப்பாணம்

## உதயன்

### உடம்பு நோவது ஏன்?

கொழும்பில் உள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் நாட்டின் நிலைமை குறித்து தவறான செய்திகளை அனுப்புகிறார்கள். அதனால் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் அரசின் முயற்சிக்கு ஊறு விளைவிக்கப்படுகிறது—

இவ்வாறு அண்மையில் வெளிநாட்டுக்குச் சென்று திரும்பிய வர்த்தகத்துறை அமைச்சர் ஜனாப் மன்சூர் கண்டனம் தெரிவித்திருக்கிறார். கொழும்பில் நடைபெற்ற வெளிநாட்டு முதலீட்டாளர் மாநாடு ஒன்றில் பேசுகையிலேயே வெளிநாட்டுப் பத்திரிகையாளர் மீது அவர் கண்டனக் கணை தொடுத்தார்.

அதே மாநாட்டில் பேசிய மற்றும் இரு அமைச்சர்களும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களைச் சாடியிருக்கிறார்கள். வடக்கு - கிழக்கு நிலைமை குறித்துப் பெரிது படுத்தியும் நாட்டில் பொதுவான நிலைமை குறித்துத் தவறாகவும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் செய்திகளை அனுப்புகிறார்கள் என்பதே அமைச்சர்களின் முறைப்பாடாகும்.

வெளிநாட்டுச் செய்தியாளர்களைப் பொறுத்த வகையில் இலங்கைக்கு - அரசுக்கு - நன்மை விளைவிக்கக் கூடியதாகவோ அல்லது தீமை விளைவிக்கக் கூடியதாகவோ தமது தொழிலைச் செய்ய வேண்டும் என்ற உள்நோக்கம் இருக்க நியாயமில்லை. அவர்களில் பலரும் வெளிநாட்டுப் பிரசைகள் என்பதால் அவர்கள் அரச பக்கம் சார்ந்து எழுதுவதாலோ அல்லது அதனை எதிர்த்து நாட்டின் அபிவிருத்திக்கு ஊறு விளைவிக்கும் வண்ணம் எழுதுவதாலோ அவர்களுக்கு நன்மை எதுவும் உண்டாகப் போவதில்லை. அவர்கள் அரசின் பக்கம், எதிரணிகள் பக்கம் என்றோ, தென்னிலங்கையர் பக்கம் தமிழீழத்தார் பக்கம் என்றோ சாய்வதில் அக்கறை கொள்ளமாட்டார்கள் என்றே அனேகமாக நம்பலாம்.

அனேகமாக தாம் நேரில் பார்ப்பதையும், தாம் கேள்விப்பட்டதில் உண்மை என்று இனங்கண்டதையுமே செய்தியாக்குவர் என நம்பலாம். வடக்கு-கிழக்கு நிலைமையைப் பொறுத்தமட்டில் அவர்கள் உண்மையான நிலைப்பாட்டில் ஐம்பது சத வீதத்தையாவது செய்தியாக்கி அனுப்புகிறார்களா என்பது சந்தேகமே!

வடக்கு - கிழக்குடன் உடனுக்குடன் தொடர்புகொண்டு செய்திகளைத் திரட்டுவதற்கு, அல்லது தமக்குக் கிடைத்த தகவல்களை சரி பார்ப்பதற்கு போதிய தொலைத் தொடர்பு மற்றும் விடயமறிந்த வட்டார வசதிகள் இல்லை குறிப்பாக அவர்கள் வடக்குக்கு அடிக்கடி வருவதற்கு அரசு அனுமதிப்பதில்லை. வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒவ்வொருவரும் வருடத்தில் ஒருமுறையாவது வடக்கே வருகிறார்களா என்றால், இல்லை! கிழக்கிற்கும் அனேகமாக அப்படித் தான்.

அரசாங்கம்- பாதுகாப்பு அமைச்சு- வழங்கும் தகவல்களையும் அவர்கள் ஏற்பாடு செய்யும் விஜயங்களின்போது கண்டறியும் அரசுக்குச் சார்பான தகவல்களையும் ஆதாரமாகக் கொண்டு தான் வெளிநாட்டுப் பத்திரிகையாளரின் செய்திச் சேவை நடக்கிறது

வழமைபோல சுதந்திரமாகத் தகவல்களைச் சேகரிக்கும் வசதி இருந்தால், நாற்றுக்கு நூறு உண்மையான நிலையைத் தெரிவிக்க அவர்களுக்கு வசதி இருந்தால், வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் வடக்கு-கிழக்கு நிலைமையைச் சரிவரப் படம்பிடித்துக் காட்ட இயலும்.

அரை உண்மையைச் சொல்லவே அரசு அமைச்சர்களுக்கு உடம்பெல்லாம் நோகிறது! முழு உண்மையும் வெளி உலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டால் அவர்கள் அரசியலை விட்டு ஓட நேரிடும்!

### சலுகை இல்லை

மன்னார் மாவட்டம் தாழ்வுபாடு, சுற்பிட்டி படகுச் சேவையில் முன்னர் வழங்கப்பட்ட சலுகைகள் இப்போது கிடைப்பது இல்லை என்று பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர். (த-எ)

# மடு அகதி முகாம் பகுதியில் கடும் தண்ணீர்ப் பஞ்சம்

## இரவுநேரம் தண்ணீர் அள்ளத் தடை கிணறுகளுக்கு அதிகாரிகள் காவல்

மன்னார், நவ. 3

அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும் மடு அகதி முகாமில், கடும் தண்ணீர்ப் பஞ்சம் நிலவுகிறது. கிணறுகளில் எஞ்சி உள்ள சிறிதளவு நீரைப் பாதுகாப்பதற்காக இரவு 8-00 மணிக்கும் அதிகாலை 4-00 மணிக்கும் இடையில் இக்கிணறுகளில் தண்ணீர் அள்ளுவதற்கு அதிகாரிகள் தடைவிதித்துள்ளனர். இந்த நேரங்களில் தண்ணீர் அள்ளுவதைத் தடுப்பதற்காக கிணறுகளுக்குக் காவலும் போடப்பட்டுள்ளது.

8 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 31 ஆயிரத்து 950 பேர் மடு அகதிகள் முகாமில் தங்கி உள்ளனர்.

கடந்த இரண்டு மாதகாலமாக இங்கு கடும் வரட்சி நிலவுவதால் குளங்கள், நீர் நிலைகள் அனைத்தும் வற்றி விட்டன.

அகதி முகாமைச் சேர்ந்தவர்கள் குடி தண்ணீரைத் தேடி தினமும் மூன்று முதல் ஐந்து மைல் தூரம் செல்கின்றனர்.

பெரும்பாலும் பண்டிவிரிச்சான், பாலம்பிட்டி ஆகிய இடங்களிலேயே ஓரளவு குடி தண்ணீர் கிடைக்கிறது.

மடு அகதி முகாம் பகுதியில் சுமார் 20 முதல் 25 லீற்றர் குடிதண்ணீர் 50 ரூபாவரை விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தூர இடங்களுக்குச் சென்று தண்ணீர் கொண்டு வர முடியாதவர்களே இந்த விலைக்கு குடிதண்ணீரை வாங்குகின்றவராம். (இ-5)

## நிவாரணப் பணம் ரூபா 5 லட்சம் மோசடி

அனுராதபுரத்தில் அகதி முகாம்களில் உள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க ஒதுக்கப்பட்ட பணத்தில் 5 லட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மோசடி குறித்து அனுராதபுரம் பொலிஸ் விசேட குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகள் நடத்தி வருவதாகவும், அனுராதபுரம் அரசாங்க அதிபர் மற்றும் கணக்காய்வுத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரிடம் இருந்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-10)

## மனித சங்கிலிப் போராட்டம் திட்டமிட்டபடியே நடக்கும்

### சுதந்திரக்கட்சி எம். பி. உறுதி

கொழும்பு, நவ. 3

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் இணைந்து எதிர்வரும் 13ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை நடத்த திட்டமிட்டுள்ள மனித சங்கிலித் தொடர் போராட்டம் திட்டமிட்டபடி நடந்தே தீரும்.

அம்பாந்தோட்ட மாவட்ட ஸ்ரீ.சு.க. நாடாளுமன்ற உறுப்பினர் திரு. மகிந்த ராஜபக்ஸ கொழும்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார். (த-5)

## இசை - நடனப் பயிற்சி

மட்டக்களப்பு, சுவாமி விபுலாநந்தர் இசை - நடனக் கல்லூரிக்கு இசை - நடனம் ஆகிய பாடநெறிப் பயிற்சிக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

இதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடைபெறும்.

ஜி. சீ. ஈ சாதாரணதரப் பரீட்சையில் இசை— நடனம் ஆகிய பாடங்களில் சிறப்புச் சித்தி பெற்றவர்கள் எதிர்வரும் டிசம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (இ-5)

## சிறிமா-அனுரா மோதல்; மீண்டும் சமரச முயற்சி

சுதந்திரக் கட்சியினுள் நிலவும் சிறிமா — அனுரா அணிகளுக்கு இடையோன மோதலை முடிவுக்குக் கொண்டுவர கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மீண்டும் மேற்கொண்ட சமரச முயற்சிகள் பலனளிக்க ஆரம்பித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

மூத்த உறுப்பினர்கள் குழு ஒன்று கடந்த வாரம் சிறிமாவைச் சந்தித்து இரண்டு மணி நேரம் சமரசப் பேச்சுக்களை நடத்தியது. பின்னர் அக்குழு அனுராவையும் சந்தித்துப் பேசியது.

சுதந்திரக் கட்சியின் கண்டி மாவட்ட எம். பிக்களில் ஒருவரான கேர்ணல் அனுருத்த ரத்வத்தையைக் பதிலாக திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை எம். பியாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வர முயற்சிகள் தற்போது இடம்பெறுகின்றன. அதேவேளை—கட்சியின் நிர்வாக வேலைகள் அனைத்தும் திரு. அனுருத்த ரத்வத்தையிடம் ஒப்படைக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## கிராமப்புறங்களில் பெரிய தொழிற்சாலைகள்: நாடாளுமன்றில் விரைவில் சட்டமூலம் சமர்ப்பிப்பு

கிராமப்புறங்களில் ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைகளை மட்டுமன்றி, வேறு பெரிய தொழிற்சாலைகளை அமைக்க வகை செய்யும் சட்ட மூலம் ஒன்று இந்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டதற்கு எதிராக அந்த மாவட்டத்தைச் சேர்ந்த எம். பி. ஒருவர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்றும்—

இதன் காரணமாகவே இப்புதிய சட்டமூலம் கொண்டு வரப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்திருக்கிறார்.

மாத்தறை மாவட்டத்தில் ஆடை தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை திறந்து வைத்துப் பேசுகையில் ஜனாதிபதி இத்தகவலை வெளியிட்டார். (த-எ)

## கொழும்பில் கோஷ்டிச் சண்டை; தமிழ் இளைஞர் சுட்டுக் கொலை

கொழும்பு, நவ. 3

கொழும்பில் தெமட்டகொடை மற்றும் கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற கோஷ்டிச் சண்டையில் தெமட்டகொடையைச் சேர்ந்த சந்திரபோஸ் என்ற தமிழ் இளைஞர் கடத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவருடன் கடத்திச் செல்லப்பட்ட மற்றொரு இளைஞரான ரவிக்குமார் என்பவரை இன்னமும் காணவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

பழைய பகைமையே கோஷ்டிச் சண்டையாக உருவெடுத்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். (த-5)

## காக்காச்சிவெட்டை...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

வெட்டை கிராமத்தில் இருந்து 12 பேரை பாதுகாப்புப் படையினர் கூட்டிச் சென்றிருந்தனர்.

இந்த 12 பேரின் சடலங்களும் பின்னர் கண்டதுண்டமாக வெட்டப்பட்டு தேடுவாரற்றுக் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்த 12 பேரும் வீடு ஒன்றில் பாதுகாப்புக்காகத் தங்கி இருந்த சமயம் தேடுதல் நடத்திய படையினர் அவர்களைப் பிடித்துச் சென்றிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் 67 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட கொக்கட்டிச்சோலைக் கிராமத்தில் இருந்து 6 மைல் தூரத்தில் காக்காச்சிவெட்டைக்கிராமம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

காக்காச்சிவெட்டையில் கைது செய்யப்பட்டவர்களில் 33 பேருக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் குடும்பத்தவர்கள் ஒவ்வொரு இராணுவ முகாமுக்கும் அலைந்து திரிவதாகவும் மிகுக மாவா ணத்தைச் சேர்ந்த தமிழ் எம்.பி. ஒருவர் ... தெரிவித்தார்.

ஆனால் இவ்வாறான சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்று கொழும்பில் பாதுகாப்புப் படைப் பேச்சாளர் தெரிவித்ததாக பி. பி. ஸி. குறிப்பிட்டது.

ஆனால் —

சுற்றிவளைப்பு, தேடுதல், கைது நடவடிக்கையில் ஈடுபட்ட படை அணிகளைப் பற்றிய விவரம் தனக்குத் தெரியும் என்று மேற்படி தமிழ் எம். பி. தெரிவித்தார்.

இதற்கிடையில் —

மட்டக்களப்புப் பகுதியில் உள்ள மூன்று தமிழ்க் கிராமங்களை கடந்த 19, 20 ஆம் திகதிகளில் சுற்றி வளைத்த படையினர் அங்கு இருந்து சுமார் 90 தமிழ் இளைஞர்களைக் கைது செய்துகொண்டு சென்றனர் என்றும் —

மனித உரிமைகள் தொடர்பாக ஆராயும் சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் இழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்திருக்கும் போது இத்தகைய குற்றம் சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது ... குறிப்பிடத்தக்கது. (உ-இ-த--5-10)

## ஜி. சீ. ஈ. முன்னோடித் தேர்வு: விடைத்தாள் திருத்தும் பணி 6 ஆம் திகதி ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், நவ. 3

ஜி. சீ. ஈ (சாதாரண) தர முன்னோடிப் பரீட்சையின் வினாத்தாள்களை மதிப்பிடும் பணி கோட்டரீதியாக எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கிறது.

இப்பணியில் ஈடுபடவிருக்கும் கட்டுப்பாட்டுப் பரீட்சகர்கள், பிரதம பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளையும் —

உதவிப் பரீட்சகர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை மறுதினமும் — யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றன.

மதிப்பீட்டுப் பணி ட்சாவகச்சேரி கோட்டத்தில் டிறிபேக் கல்லூரியிலும் —

வடமராட்சிக் கோட்டத்தில் வட இந்து மகளிர் கல்லூரியிலும் —

மருதனார்மடம் பண்டத்தரிப்பு கோட்டங்களுக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் —

யாழ். கோட்டத்தில் யாழ் இந்துக் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென் ஜேம்ஸ் கல்லூரி, மத்திய கல்லூரி கனகரத்தினம் ம. ம. வி. ஆகியவற்றிலும் நடைபெறவிருக்கின்றன. (உ-3)

## இனப்பிரச்சினைத் தீர்வு; மக்களின் அங்கீகாரம் பெற சர்வஜன வாக்கெடுப்பு!

### லலித் சொல்கிறார்

கொழும்பு, நவ. 3

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை. தமிழர் பிரச்சினைகளுக்கு எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வை முன்வைத்து அரசு செயற்பட வேண்டும். இதற்கான மக்களின் அங்கீகாரத்தை சர்வஜன வாக்கெடுப்பு மூலம் பெறலாம்.

அவிசாவளை நகரில் நடைபெற்ற ஜனநாயக தேசிய முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடபகுதி யுத்தத்தால் நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பல முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்க்கமான முடிவுகாண இந்த அரசாங்கத்திடம் திட்டங்கள் இல்லை.

இனங்களுக்கு மத்தியில் மோதலை ஏற்படுத்தி, அரசு தனது ஆட்சியை நீடித்து வருகிறது.

கடந்த காலங்களில் மத்திய வங்கியின் அறிக்கை வருடாவருடம் வெளிவந்து கொண்டிருந்தது; ஆனால் அரசின் நிதி நிலைமை சீராக இல்லாததால் இப்போது அறிக்கை வெளிவருவதில்லை.

இப்படி திரு. அத்துலத்முதலி மேலும் கூறினார். (த-இ-5)

## நாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்போம்

### மன்னார் புதிய ஆயர் உரை

மன்னார், நவ. 3

போர் மேகங்கள் தென்படும் இவ்வேளையில் நாமும் வாழ்வோம் பிறரையும் வாழ வைப்போம். இதுவே எம் அனைவரினதும் தாரக மந்திரமாக இருக்க வேண்டும். இதற்கு ஆன்மீக வழியே உகந்தது.

மன்னார் மாவட்ட புதிய ஆயர் அருட் திரு. இராயப்பு ஞானானந்தன் ஜோசப் ஆண்டகை மேற்கண்டவாறு கூறினார்.

மன்னார் மாவட்டத்தின் புதிய ஆயருக்கு வரவேற்பும், யாழ். மறை மாவட்டத்துக்கு நியமனம் பெற்றுச் செல்லும் அருட் திரு. தோமஸ் சௌந்தரநாயகத்துக்கு பிரியாவிடையும் அளிக்கும் வைபவம் மன்னார் பேராலய வெளியரங்கில் கடந்த செவ்வாயன்று நடைபெற்றது.

மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட் திரு. சேவியர் குருஸ் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அருட் திரு. இராயப்பு ஞானானந்தன் ஜோசப் ஆண்டகை தொடர்ந்து பேசியதாவது.

மன்னார் மறை மாவட்டம் எனக்குப் புதியதல்ல 25 ஆண்டுகளுக்கு முன்னர் இம் மாவட்டத்தில் உயிலங்குளம் பங்கில் உதவி பங்குத் தந்தையாகக் கடமை புரிந்துள்ளேன். இறைவன் இந்த உறவை ஏற்படுத்தித் தந்து இங்கு மீண்டும் சமூக, சமய பணியாளனாக அனுப்பி இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்;

இப்படி அவர் கூறினார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவக்கொழுந்து முத்தையாபிள்ளை

தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி வடக்கு குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து முத்தையாபிள்ளை நேற்று திங்கள் [2 - 11 - 92] அதிகாலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற தெல்லிப்பழை நமசிவாயம் செல்லையா, மாசிமுத்து செல்லையா தம்பதிகளின் மூத்த புதல்வியும், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை ஓய்வுபெற்ற உத்தியோகத்தரும், பண்டத்தரிப்பு செட்டிக்குறிச்சியைச் சேர்ந்தவரும், அளவெட்டியில் வசிப்பவருமான வேலுப்பிள்ளை முத்தையாபிள்ளையின் அன்புத் துணைவியாரும், முத்துவேல்ராசா, சிவலிங்கராசா, செல்வலிங்கராசா, புஸ்பலிங்கராசா, சண்முகலிங்கராசா, சாந்தலிங்கராசா, விக்கினலிங்கராசா, முத்துராணி நித்தியகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதிகள் புஷ்பராணி, இரத்தினகுமாரி, புவனேஸ்வரி, உத்தமதேவி, இரத்தினரூபி, வசந்த யோகினி, இரஞ்சனி, திருவாளர்கள் சிவலோகநாதன், இரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுகன்வியா, சுஜந்தன், மயூரா, தரன், இந்திரஜித், இந்திரவால், இந்திரா, இந்திரலோஜன், சிந்துஜா, தினேஸ்குமார், யூலியன், பிரதீப், சஜிக்கா, சுரேன், மயூரன், ஜனகன், இரவீந்தினி ஆகியோரின் பிரியமுள்ள ஆசைப் பாட்டியும், நமசிவாயம், தெல்லியூர் நடராசா, சிவபாக்கியம் காலஞ்சென்ற சரஸ்வதி மயில்வாகனம், நகுலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதிகள் ஸ்ரீமதி கனகம்மா, திருவாளர்கள் கிருஷ்ணபிள்ளை, காலஞ்சென்ற மயில்வாகனம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் மூத்த மகனின் இல்லமாகிய யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி 273/11 ஆம் இலக்க இல்லத்தில் [3 - 11 - 92] செவ்வாய்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியையின் பொருட்டு யாழ்ப்பாணம் கோம்பயன்மணல் மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புரிமை தழுவி வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
[23124] க. வே. முத்தையாபிள்ளை

## திருமதி பூரணம் பொன்னுத்துரை

உரும்பராய் தெற்கைச் சேர்ந்த பூரணம் பொன்னுத்துரை 01-11 92 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி, தம்பிரசா [அமெரிக்க நூல்நிலையம், கொழும்பு], ராஜமணி, ராஜலட்சுமி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம், கமலாதேவி, காலஞ்சென்ற நடராசா, இராமலிங்கம், காலஞ்சென்ற ஆரூரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், அனுசூயா, காலஞ்சென்ற அசோகன், பார்த்திபன், ஆதித்தன், ஆனந்தி, நிரோதினி, நிமலன், நிரஞ்சன், மகிந்தன், காலஞ்சென்ற துஷ்யந்தன், இரம்மியா, கபிலன், சிவகுமார், சித்திரா, பராராஜசிங்கம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரூபிகாவின் பூட்டியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று [02-11-92] நடைபெற்றன.

தகவல்:
"தமிழகம்" செ. சுப்பிரமணியம்
உரும்பராய் தெற்கு. [மருமகன்]
(23125)

## கா. பொ. தர்மலிங்கபிள்ளை

[வேலணை கிழக்கு, 5 ஆம் வட்டாரம்]

வேலணை கிழக்கு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாக கொண்டவரும், தற்போது சண்டிலிப்பாயில் வசித்தவருமாகிய கா. பொ. த. என அழைக்கப்படும் கா. பொ. தர்மலிங்கபிள்ளை 02-11-92 இல் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - கனகம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பையா - இராசம்மாவின் அன்பு மருமகனும், கண்மணிப்பிள்ளையின் அன்புக் கணவரும், சிவலிங்கம் [பொறியியலாளர், U. K.], பாக்கியலெட்சுமி, மகாலிங்கம் [ஜேர்மனி], சண்முகலிங்கம் [ஜேர்மனி] மகாலெட்சுமி, தனலெட்சுமி, விஜயலெட்சுமி [இந்தியா] ஆகியோரின் அன்புத் தந்தையும், திலகவதி [U. K.] பரமசிவம், இந்திரா [ஜேர்மனி], ஸ்ரீதேவி கனகராசா [ஆனந்தா ஸ்ரோர்ஸ் உயிலங்குளம், மன்னார்], குணரத்தினம் [வர்த்தகர், பண்டத்தரிப்பு], மேகநாதன் [இந்தியா] ஆகியோரின் அன்பு மாமனாரும், சோமசுந்தரம், காலஞ்சென்ற காராளசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகம்பிள்ளை, காலஞ்சென்ற சந்தையா [கரம்பொன்], சதாசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், முரளி [U. K.], சோமா [U. K.], பாஸ்கரன், சிவகௌரி, பார்த்திபன், பானுகோபன், பிரதாப் [ஜேர்மனி], பிரஞ்சனா [ஜேர்மனி], கஜராசன், சஜராயினி, பரணிதரன், காயத்திரி, ஜெயகாந்தன், தயாழினி, விக்கினகாந், ஜெயதர்சினி, கோகுலதாஸ், தர்மதாஸ், ஜனனி [இந்தியா], மயூரன் [இந்தியா] ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு அவரது மகளின் சண்டிலிப்பாய் இல்லத்தில் நேற்று [02-11 92] மாலை நடைபெற்று, பூதவுடல் மாவிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:
லீலா பேக்கறி கேள் மு நா. கனகராசா
சண்டிலிப்பாய் தெற்கு, (சோதி)
சண்டிலிப்பாய் (23127)

## திருமதி இரத்தினமமா திருஞானம் செட்டியார்

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி இரத்தினம்மா திருஞானம் செட்டியார் 2 - 11 - 92 காலமானார். இவர் காலஞ்சென்ற மு திருஞானம் செட்டியாரின் அன்பு மனைவியும் சண்முகநாதனின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 3 - 11 - 92 K. K S வீதி, யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பி ப. 2 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
K. K. S வீதி, தி. கணேஸ்வரன்
யாழ்ப்பாணம். [23129]

# போலி அரிசி கூப்பன் வழக்கு: ஒஸி உட்பட 9பேர் விடுதலை

கொழும்பு, நவ. 3

போலி அரிசிக் கூப்பன்களை வெளியிட்டதன் மூலம் மோசடியில் ஈடுபட்டதற்காக மேல்நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாகக் காணப்பட்ட ஒஸி அபயகுணசேகரா உட்பட ஒன்பது பேரை மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளித்திருக்கிறது.

இக் குற்றச்சாட்டுக்களுக்காக தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ள ஒன்பது பேர்கள் உட்பட 86 பேர் மீது முன்னர் மேல் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. மேல் நீதிமன்ற விசாரணையின் பின்னர் இந்த ஒன்பது பேரைத் தவிர, ஏனையோர் விடுதலை செய்யப்பட்டனர். இந்த ஒன்பது பேருக்கும் தலா ஐந்நூறு ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதனை எதிர்த்து செய்யப்பட்ட மேன்முறையீட்டை மேன்முறையீட்டு நீதிமன்றம் தற்போது ஏற்று, ஒன்பது பேரையும் விடுதலை செய்திருக்கிறது.

1981 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் கீழ் இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தேர்தல் பிரசாரத்திற்காக திரு ஒஸி அபேகுணசேகரா குழுவினர் மாதிரி அரிசிக் கூப்பன்களை வெளியிட்டிருந்தனர் என்பது தெரிந்ததே

(உ-எ)

## டிசம்பர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விப்பை விடுத்தார்.

வடக்கு - கிழக்கில் உள்ள படையினரின் முகாம்களுக்கு நேரில் சென்று, படையினரைச் சந்தித்து, அவர்களின் நலன்களைக் கேட்டறிந்து, அவர்களுக்கு மனத் தைரிய மூட்டும் நடவடிக்கையில் பிரதமர் விஜேதுங்க மும்முரமாக ஈடுபட்டிருப்பது தெரிந்ததே.

அந்த நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே பிரதமர் வவுனியாவுக்கு விஜயம் செய்தார். அங்கு படையினர் மத்தியில் உரையாற்றுகையிலேயே டிசம்பர் இறுதிக்குள் யுத்தத்தை முடிக்க வேண்டும் என அவர் காலக்கெடு விதித்தார்.

(உ-இ-5)

## அடுத்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மறுத்தார்.

இதனிடையே மூன்றாவது வேட்பாளரான றொஸ் பெறோ ஜனாதிபதி புஷ்ஷின் பொருளாதாரக் கொள்கைகளைக் கடுமையாகச் சாடியுள்ளார்.

ஜோர்ஜ் புஷ் மீண்டும் பதவிக்கு வந்தால் அமெரிக்கா ஒரு மூன்றாம் உலக நாடாகி விடும் என அவர் தனது தேர்தல் பிரசாரத்தின் போது கூறினார்.

இதே சமயம் —

தேர்தல் பற்றிய கருத்துக் கணிப்பில் முரண்பாடான முடிவுகள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பில் கிளின்ரன் முன்னணியில் நிற்பதாகச் சில கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கும் அதேவேளை ஜோர்ஜ் புஷ்ஷுக்கு கடைசி நேரத்தில் ஆதரவு பெருகி வருவதாக இருவருக்குமிடையே கடும் போட்டி நிலவுவதாகவும் வேறு சில கருத்துக் கணிப்புகள் தெரிவித்தன.

(உ-10)

## 1 கோடி ரூபா...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கவில்லை என்று விசாரணையில் தெரிய வந்தது.

இதற்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடிக்கும் புலன் விசாரணைகளை சி.ஐ.டி திணைக்களத்தினர் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது (உ எ)

# மாணவர் முத்திரைக்கு பொருள்கள் விநியோகம்

மூன்று மாதங்களுக்குரிய மாணவர் முத்திரைகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

1991ஆம் ஆண்டு செப்டம்பர், 1992ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களுக்குரிய மாணவர் உணவு முத்திரைகளுக்கு நாளை புதன்கிழமை முதல் யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளிலும் பொருள்கள் விநியோகிக்கப்படும். யாழ் ப. நோ. கூ. ச. வட்டாரங்கள் நேற்று இத்தகவலை வெளியிட்டன.

(உ-17)

## உலர் உணவு விநியோகம்

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் இன்று முதல், ஒக்டோபர் மாதத்தின் 4 ஆம் வாரத்துக்கான உலர் உணவு விநியோகம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


05 - 11 - 92 முதல்

O/L PAPER CLASS

யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

[C/3652]


# மரண அறிவித்தல்

## குமாரசாமி தவராசலிங்கம்

சிறுப்பிட்டி மேற்கு இராச வீதியைச் சேர்ந்த குமாரசாமி தவராசலிங்கம் [ஆசிரியர், ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்] 2-11-92 அன்று காலமானார். அன்னார் தம்பு குமாரசாமி - நவரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆசிரியர் குமரேசு நடராசா - கண்மணி ஆகியோரின் அன்பு மருமகனும், பொன்மலர் [ஆசிரியை, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி] அவர்களின் அன்புக் கணவரும், நரேந்திரனின் அன்புத் தந்தையும், ஜெகதீஸ்வரன் [ஈசன் - C. T. B. நடத்துனர்], சிவா, நகுலன் [சுவிஸ்], விமலன் (சுவிஸ்), ஜெயந்தி, வசந்தி, சாந்தி [சுவிஸ்], சுகந்தி [பேராதனை மருத்துவபீட மாணவி] ஆகியோரின் அன்புச் சகோதரரும், குமரேசபதி (கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி அதிபர்), சிவபாதசுந்தரம் (கிராமிய வங்கி முகாமையாளர்), காலஞ்சென்ற மாணிக்கவாசகர், செல்வநாயகி [ஆசிரியை, இடைக்காடு மகா வித்தியாலயம்], சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று (3-11-92) காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி பத்தகலட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
[23128] குமாரசாமி


# தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

உப பரிசோதகர் / காவலர் தரங்கள்

கல்வித்தகைமைகள்:- 8 ஆம் வகுப்புத் தொடக்கம் க. பொ. த [உயர்தரம்] வரை

உயரம் :- 5' 6"

வயது :- 18 தொடக்கம் 30 வரை

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் 05-11-92ம் திகதி வரை நாவலர் வீதியில் உள்ள காவல்துறை அலுவலகத்திற்கு நேரடியாக சமுகம் தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதவர்களும, நேர்முகத்தேர்வின் இறுதித் தேர்விற்கு அழைக்கப்படாதவர்களும் உடனடியாக சமுகம் தரவும்.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
(சி/3651) காவல்துறை, தமிழீழம்.


...ப்பிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் ... 282/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org